அருளிச்செயல் ஏற்றம்

ஸ்ரீ உ.வே. அகரம் K. S. ஸ்ரீனிவாஸாசாரியர் ஸ்வாமி

ஆழ்வார்கள் வாழி அருளிச் செயல்வாழி
தாழ்வாது மில்குரவர் தாம்வாழி—ஏழ்பாரும்
உய்ய அவர்க ளுரைத்தவைகள் தாம்வாழி
செய்யமறை தன்னுடனே சேர்ந்து.

ஸம்ஸாரி சேதனர்கள் தங்களது ஆத்மாவை வெய்யிலில் உலர்த்தி' தேகத்தை நிழலில் வைத்துத் தங்கள் ஸ்வரூபத்தையும், ஈச்வர ஸ்வரூபத்தையும் மறந்து, ஈச்வர கைங்கர்யத்தையும் இழந்து, துக்கமான ஸம்ஸாரக் கடலிலே விழுந்து நோவுபட, பரம காருணிகனான ஸர்வேச்வரன், இவர்களை ஸஜாதீயரைக் கொண்டு திருத்த வேண்டுமென்று நினைத்து, வேதவேதாந்தங்களின் உட்கருத்துக்களைத் திராவிட பாஷையில் பாசுரமடியாக வெளியிடும்படி பராங்குச பரகாலாதி ஆழ்வார்களைத் தன்நிர்ஹேதுக க்ருபையாலே அவதரிப்பித்து மயர்வறமதி நலம் அருளினன். இவர்களுள் அக்ரேஸரரானவர் நம்மாழ்வார். இவருக்கு வேதம் தமிழ் செய்த மாறன் என்கிற பெயரும் உண்டு. "அடியார் நிலாகின்ற வைகுந்தமோ, வையமோ நும் நிலையிடம்", என்கிறபடியே இவர் அவ்வுலகத்தவரோ, இவ்வுலகத்தவரோ என்று சங்கிக்கும்படியாயிருக்கிறது இவரது வைபவம். இவர் நாதமுனிகளுக்கு நாலாயிரமும் தன் நிர்ஹேதுக க்ருபையாலே ப்ரகாசிப்பித்தருளினர்.

பகவத் ஸ்வரூப ரூப விபூதிகளை விசத, விசததர, விசததமமாக அனுபவித்து, அங்கே உள்ளடங்காமல் வழிந்து புறப்பட்ட சொல்லாயிற்று இப்பிரபந்தங்கள். தொண்டர்க்கு அமுதுண்ணச் சொன் மாலைகள் என்றன்றோ இவைகளுக்குச் சிறப்பு! இவர் அருளிச்செய்த ப்ரபந்தங்களும், மற்ற ஆழ்வார்கள் அருளிச்செய்த ப்ரபந்தங்களும் உட்கருத்துக்களில் ஐககண்ட்யம் பெற்றுள்ளன.

வைதிக மதத்திற்கு வேத வேதாந்தங்கள், வேத ஸாரபூதமான பகவத்கீதை ப்ரம்மஸூத்ரம், இவை முக்கிய ப்ரமாணங்கள். ஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்கள், இவைகளுக்கு உபப்ரம்ஹணங்கள். இவைகளின் உட்கருத்துக்களை அநுஸரித்தே அருளிச்செயல்கள் அவதரித்துள்ளன. அவையாவன: தத்வஹித புருஷார்த்தங்கள்

அசேஷசித்—அசித்வஸ்து சேஷிணே
சேஷசாயினே
நிர்மலாநந்த கல்யாணநிதயே
விஷ்ணவே நம:
(வேதாந்த ஸங்க்ரஹம்)

சித்வஸ்துக்களென்ன, அசித்வஸ்துக்களென்ன இவைகளுக்கெல்லாம் சேஷியாயிருப்பவன், சேஷசாயியாயிருக்கிறவன், அவன் நிர்மலன், அனந்தன், அனவதிக கல்யாண குணங்களுடையவன், அவனே தான் பரதேவதை. அவன் பெயர் விஷ்ணு (அவனுக்கு நாராயணன், பகவான், புருஷோத்தமன் என்கிற பெயர்களுமுண்டு) அவனைப் பக்தியால் பெறலாம். அவனே நமக்கு உபாயம், உபேயம், அவனை நமஸ்கரிக்கிறேன்.

ஜீவாத்மா சேஷபூதன், பரமாத்மா சேஷி, கைங்கர்யம் புருஷார்த்தம். பெருமான் க்ருபை நிர்ஹேதுகம்.

தர்சனத்திற்கு ப்ரதான ப்ரதி தந்த்ரம் சரீராத்ம பாவம். பரமாத்மாவிற்கு ஜகத் சரீரம். அவன் ஜீவாத்மாவிற்குள் அந்தர் யாமியாக இருக்கிறான். இந்த தத்வங்களை ஸ்பஷ்டமாக ப்ரகாசப்படுத்தியிருக்கிறார்கள் ஆழ்வார்கள். வேதங்களாலும், வேத வேதாந்தங்கள் அறிந்தவர்களுக்குள் அக்ரேஸரர்களான வால்மீகி பகவான் பராசரர், வியாஸர் இவர்களுடைய திவ்ய ஸூக்திகளாலும், இவர்களைப் பின்பற்றிய ஆழ்வார்களுடைய திவ்ய ஸூக்திகளாலும் நாம் சம்சய விபர்யயமின்றித் தத்வஹித புருஷார்த்தங்களை அறியலாம்.

வேத ரஹஸ்யமான ரஹஸ்ய த்ரயத்தைப் பகவான்தானே அருளிச் செய்தான். உபநிஷத் ஸாரமான கீதையையும் அவனே அருளிச்செய்தான். "மந்திரத்தை மந்திரத்தால் மறவாதென்றும் வாழுதியேல் வாழலாம்"என்று திருமங்கையாழ்வார் அருளிச்செய்கிறார். மந்த்ரம் என்று பகவானுக்கு ஒரு திருநாமம். (ஸஹஸ்ரநாமம்) "தஸ்மாத் சாஸ்த்ரம் ப்ரமாணம்.' என்று கீதாசார்யன் வசனம். சாஸ்த்ரம் என்றால் வேதம். வேதம் முதல் ப்ரமாணம். எல்லோரும் சாஸ்த்ரத்திற்குக் கட்டுப்பட வேண்டும். முமுக்ஷுவான சேதனனுக்கு ரஹஸ்யத்ரய ஜ்ஞானம், அர்த்த பஞ்சக ஜ்ஞானம், தத்வத்ரய ஜ்ஞானம் உண்டாக வேண்டும். இவைகள் அருளிச்செயலில் ப்ரகாசப்படுத்தப் பட்டிருக்கின்றன. ஆசார்ய பரம்பரா ப்ராப்தங்களான அர்த்த விசேஷங்களனைவற்றையும் லோகாசார்யன் ஸ்ரீவசன பூஷண பங்க்தியில் அறுதியிட்டருளுகிறார். இந்த ப்ரபந்தம் நம் தர்சனத்திற்கு இன்றியமையாதது.

வேதத்தில் ஆராதன ரூபமான கர்மமும், ஆராத்ய ரூபமான ப்ரம்மமும் ப்ரதிபாத்யம். தேவதாந்தரங்களை உத்தேசித்துப் பண்ணும் கர்மம் பகவதாராதன ரூபமாகத் தலைக்கட்டும். (அவரவர் விதி வழியடைய நின்றனரே) "மத்கர்மக்ருத்" என்கிறதற்கு வேதாத்யயநாதிஸர்வாணி கர்மாணி மத் ஆராதன ரூபேணய: கரோதி ஸ: மத்கர்ம க்ருத் என்று எம்பெருமானார் பாஷ்யம் அருளிச்செய்கிறார். எல்லா யஜ்ஞமும் பகவதாராதன ரூபம். பகவத் கைங்கர்யம். ஆகையால் கர்மம் கைங்கர்யத்தில் புகும் என்று பணிப்பது நம் தர்சனத்திற்கு ஒரு தனிச் சிறப்பு.

"அநந்தாவை வேதா:", என்கிறபடி வேதம் அளவில்லாதது. நம்போல்வார்க்கு வேத வேதார்த்தங்கள் பண்ணுவது மிகவும் கஷ்டம். 'ஆரணஸாரம்', சுடர் மிகு சுருதி' என்றே ஆழ்வார்கள் ஸ்ரீ ஸூக்திகள்.

இதிகாஸ புராணங்கள் ஸார அஸார மிச்ரம்; சதுரர்க்கொழிய மற்றவர்களுக்குத் தாத்பர்யாம்சம் அறிய முடியாது. புராணகர்த்தாக்களின் குணங்களையனுசரித்தே புராணங்கள் அவதரித்தன.

ஸகல வேதஸாரமான ரஹஸ்ய த்ரயம் அதிஸங்க்ரஹம். உபதேச கம்யார்த்தங்கள் இதில் அடங்கியிருக்கின்றன.

உபநிஷத்ஸாரமான கீதை தத்வபரம். அத்யாயங்களில் சொல்லப்படுகிற பல அர்த்தங்களுக்கு அந்யோந்ய விரோதம் வராமல் வேதாந்தங்களில் சஞ்சரித்து நம் தர்சனத்திற்கு அபிமதமான அர்த்தங்களை நிர்ணயம் பண்ண வேண்டும். இது நம் போல்வார்க்கு அரிது.

அருளிச் செயலோ, நாலாயிர திவ்ய ப்ரபந்தம் என்று நிரளவு பட்டு வழங்கப் பட்டு வருகிறது. மயர்வற மதிநலம் அருளப் பெற்ற ஆழ்வார்கள் வேத வேதாந்தார்த்தங்களை ஸங்க்ரஹித்தும்

சேதனர்கள் ஸுலபமாகப் பருகும்படிக்கு ப்ரபந்திகரித்தருளினர்கள். சாஸ்த்ரங்களைக் காட்டிலும் உபதேசாத்மகமாயிருக்கையாலும் வேதாந்தார்த்தங்களை அந்யாபதேசத்தால் மறைத்துச் சொல்லுகையாலும், அருளிச்செயலுக்கு ஏற்றமுண்டு. மேலும் பரம்பரா ப்ராப்தமான அர்த்தங்களைப் பின்புள்ளார்க்கு உபயோகப்படும்படி, பூர்வாசாரியர்கள் இவைகளுக்கு விஸ்தாரமான வியாக்யானங்கள் வெளியிட்டருளியிருக்கிறார்கள்.

"ஸத்யம், ஸத்யம், புனஸ் ஸத்யம்" என்கிறபடியே த்ராவிட வேதமான அருளிச்செயலும் சாஸ்த்ரந்தான்.

ஸம்ஸ்க்ருத வேதங்களுக்கு லக்ஷணங்கள் அமைந்திருக்கிறாப் போல, தமிழ் வேதத்திற்கும் எழுத்து, அசை, சீர், பந்தம், அடி, நிரை யாப்பு... முதலிய லக்ஷணங்கள் அமைந்திருக்கின்றன.

ஸம்ஸ்க்ருத வேதம் கல்லும் மண்ணும் கலந்த கட்டிப் பொன். தமிழ் வேதம் பணிப் பொன். வேதமானது அத்யேதாக்களின் பேதத்தாலும், லோக பேதத்தாலும் பஹுவிதம். அதில் த்ராவிட வேதமும் ஒருவிதம். ஸம்ஸ்க்ருதம் த்ராவிடம் என்கிற பிரிவு ருகாதி பேதம் போலே; செந்திறத்த தமிழ் என்கையாலே ஆகஸ்த்யமும அநாதி. வடமொழி மறை என்பது தென்மொழி மறையை நினைத்திறே. ஓதுவார் ஓத்தெல்லாம் எவ்வுலகத் தெவ்வெவையும், என்கையாலே வேதம் பஹுவிதம் என்று சொல்வதில் குறையில்லை. வேதங்கள் வாச்யத்தையடைந்து நிலைநில்லாமையாலே மீளும். யதோவாசோ நிவர்த்தந்தே. அருளிச்செயலிலே வாச்யம் வாசகத்தை விட்டுப் போகாது.

ஸம்ஸ்க்ருத வேதத்திற்கு ஸர்வாதிகாரத்வம் கிடையாது. திராவிட வேதத்திற்கு ஸர்வாதிகாரத்வம் உண்டு. இது இதற்கு ஒரு தனிச்சிறப்பு.

வேதத்திற்கு ஆரம்பத்திலும், முடிவிலும், ஓங்காரம் அநுஸந்திக்கப்படுகிறது. அதுபோல் அருளிச்செயல் அநுஸந்தானத்தில், திருப்பல்லாண்டு அநுஸந்திக்கப்படுகிறது.

"யத் வேதா தெளஸ்வரப்ரோக்த:" வேதத்திற்கு ஓம் என்னுமதுபோல்...... என்பன குறிப்பு. எம்பெருமானார் திருவாய்மொழி ஸூக்திகளைக் கொண்டு ஸூத்ர வாக்யங்களுக்கு அர்த்தங்களை நிர்ணயித்து ஒருங்கவிட்டருளுவர் என்று பூர்வர்கள் பணிப்பர். இதற்குக் காரணம் "வித்யச்ச"; நம்மாழ்வார் போல்வார் நினைவை சாஸ்த்ரங்கள்தான் பின் செல்லுவதாகப் பரமசார்யர் ஆளவந்தார் வசனமென்கை. தத்வதர்சியான நம்மாழ்வார் அருளிச்செய்த ப்ரபந்தங்கள் நான்கு. அவைகளில் திருவிருத்தம் ருக்வேதஸாரம், திருவாசிரியம யஜுர் வேதஸாரம், பெரிய திருவந்தாதி அதர்வண வேத ஸாரம், திருவாய்மொழி ஸாம வேத ஸாரம் (தீர்க்க சரணாகதி நீண்டத்வயம்).

சாந்தோக்யத்திற்கு உத்கீதம், ப்ரதானம்: அந்த உத்கீதந்தான் திருவாய்மொழியாக அவதரித்தது.

திருமங்கையாழ்வாரது ஆறு ப்ரபந்தங்களும் நம்மாழ்வார் ப்ரபந்தங்களுக்கு ஆறு அங்கங்கள். இவைகள் அர்ச்சாவதார ப்ராவண்யாதிகள். மூலமந்த்ர விவரணம். மற்ற ஆழ்வார்களுடைய ப்ரபந்தங்கள் உபப்ரம்ஹணங்கள். எல்லாம் தத்வத்ரய, ரஹஸ்யத்ரய சரணாகதி விவரணங்கள்.

பீஷ்மாசார்யர் சரதல்பராய்க் கிடக்க அவரைக்கொண்டு நாட்டாருக்குத் தர்மங்களைச் சொல்லுவித்தாப் போலே, எம்

பெருமான் ஆழ்வார்களைக் கொண்டு தத்வ ஹித புருஷார்த்தங்களைச் சம்சயவிபர்யய மின்றி வெளியிட்டருளினன். (என்னுலும் தன்னைச் சொல்லிய சூழல் திருமாலவன்கவி யாது கற்றேன்).

ஆழ்வார்கள் பரத்வத்தை ஸ்பஷ்டமாக அருளிச்செயலில் அறுதியிட்டிருக்கிருர்கள். (உயர், திண், அணை, ஒன்று).

நாயமாத்மா ப்ரவசனேன லப்ய: நமேதயா நபஹுனாதா ச்ருதேந, யமேவைஷ வ்ருணுதே, தேந லப்ய:, தஸ்யைஷ ஆத்மா விஸ்ருணுதே தநும் ஸ்வாம் என்கிறபடி இந்த பரமாத்மா ச்ரவணத்தாலும், மனனத்தாலும், த்யானத்தாலும் அடையக்கூடியவனல்லன். அவனுடைய நிர்ஹேதுக க்ருபையாலேதான், அவனை அறிய முடியும், அடைய முடியும். எவனை அந்த பரமாத்மா வரிக்கிருனே அவனுக்குத் தன் திவ்யமங்கள விக்ரஹத்தைக் காட்டுகிருன். இது ஸ்வாதந்த்ரியத்தால் வரும் பாரதந்த்ரியம்.

வெறிதே அருள்செய்வர் செய்வார்கட்கு உகந்து. எம்மா பாவியற்கு விதிவாய்க்கின்றது; விதிவாய்க்கின்று காப்பாரார், என்னைத்தன் வாரமாக்கி வைத்தான் வைத்ததன்றி என்னுள் புகுந்தான், கோரமாதவம் செய்தனன்கொலறியேன், என் நன்றி செய்தேனே என் நெஞ்சில் திகழ்வதுவே; அருள்செய்வான் அமைகின்ருன்; அது நமது விதிவகையே இறைவன் அத்யந்தபாரதந்த்ரியமுள்ளவன். மிகவும் ஸுலபன். நம்முடன் தாழ நின்று பரிமாறுபவன்.

உணர்வில் உம்பர் ஒருவனை அவனதருளால் உறல்பொருட்டு என் உணர்வினுள்ளே இருத்தினேன் அதுவும் அவனது இன்னருளே.

பகவதநுபவ ப்ரீதிகாரித கைங்கர்யம் புருஷார்த்தம்: அதுவும் மிதுன கைங்கர்யம். (சென்றால் குடையாம், தொண்டே செய்து தொழுது வழியொழுக. உனக்கே நாம் ஆட்செய்வோம்.) என்கிறபடியே, கைங்கர்யந்தான் அநந்யப்ரயோஜனமாம்படி இருக்கவேண்டும். திருமந்த்ரத்தில் நம: கைங்கர்யத்தில் களையறுக்கிறது.

நாராயணனே நமக்கே பறைதருவான் என்கிற அத்யவஸாயம் வேண்டும். அவன்தான் பாற்கடல் துயின்ற பரமன். ஓங்கி உலகளந்த உத்தமன். ஊழி முதல்வன், முதல் தனி வித்து, தயரதன் பெற்ற மரதகமணித்தடம், மாயன், வடமதுரை மைந்தன், தூயோமாய் அவன் திருக்கோயிலுக்குச் சென்று வாயினல் பாடி மனத்தினல் சிந்திக்க நம பூர்வ உத்தராகங்கள் மாய்ந்துபோம். கடங்கள் மேல் வினை முற்றவும் வேம்; இது மெய்.

விரையார் பொழில் வேங்கடவன் தான் நம் மதிளரங்கத்தம்மான். சேதனரை அடியார்க்கு ஆட்படுத்த விமலன்.

பகவத் கைங்கர்யத்தின் எல்லைநிலம் பாகவத கைங்கர்யம். ஆராதநாநாம் ஸர்வேஷாம் ததியாராதநம் பரம். என்கிற படியே ஸகலவேத தாத்பர்யமான பாகவத சேஷத்வத்தை நெடுமாற்கடிமை, பயிலும் சுடரொளி, கண்சோர வெங்குருதி, தேட்டரும், நண்ணாத வாளவுணர், மேம்பொருளுக்கு மேல்பாட்டுக்கள் இவற்றில் ஆழ்வார்கள் இதையே அறுதியிட்டிருக்கிருர்கள். நின் திருவெட்டெழுத்தும் கற்று நான் உற்றதும் உன்னடியார்க்கு அடிமை என்றன்றோ திருமங்கையாழ்வார் அறுதியிடுவது. பாகவத கைங்கர்யத்தின் எல்லைநிலம் ஆசார்ய கைங்கர்யம். அம்பொன் அரங்கற்கும், ஆவிக்கும் அந்தரங்கஸம்பந்தம் காட்டி, தடை

காட்டி, உம்பர்திவம் என்றும் வாழ்விற்குச்சேர்ந்த நெறிகாட்டுமவன் ஆசார்யன். "தேவுமற்றறியேன்" என்று மதுரகவிகள் அருளிச்செய்கிறார். "மதுரகவிகள் சொற்படியே நிலையாகப்பெற்றோம்" என்று ஆசார்யன் மணவாளமாமுனிகள் அறுதியிடுவது, ஆசார்யாபிமானமே நமக்கு உத்தாரகம். ஆசார்யன் நிழலிலே எப்போதும் நாம் இருக்கவேண்டும். இது ஸ்வரூபத்தை பல பர்யந்தமாக்கும். ஆசார்யன் நம் உஜ்ஜீவனத்துக்கு தத்வக்ஞானத்தை ப்ரகாசப்படுத்துகிறான். ஆசார்ய ஸம்பந்தம் மோக்ஷஹேது.

அருளிச்செயலில் அர்ச்சராதி மார்க்கத்தை "சூழ்விசும்பணிமுகிலில்" மிகவும் அழகாக ஆழ்வார் வருணிக்கிறார். இன்றும் அருளிச்செயலில் உபதேசபதிகங்கள் நமக்கு இன்றியமையாதவை. (நரகத்தை நகு நெஞ்சே).

ஐச்வர்யம் அஸ்திரம் (ஒருநாயகமாய்).

அருளிச்செயலின் உட்கருத்துக்கள், வேத வேதாந்தங்களின் உட்கருத்துக்களை அனுசரித்தே விளங்குவன. ஆகையால் அருளிச்செயல் மங்களமானவை என்பது ஸித்தம். நம்மையும் ஸாத்வீகர்களாக்கும்.

கறந்தபாலில் ஜலபாகம், அம்ருதபாகம் இரண்டும் ஒன்றிக்கிடக்கின்றன. அதுபோல அருளிச்செயல்கருத்துக்கள் வேதரஹஸ்யங்கள் இரண்டும் ஒன்றியிருக்கின்றன. ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்கமுடியாது.

அடியார் குழாம், பொலிக பொலிக பொலிக. வேதம் வல்லார்கள் குழாங்கள் ஸம்ருத்தமாகவேண்டும், ஸம்ருத்தமாகவேண்டும், ஸம்ருத்தமாகவேண்டும்.

ஓம் ஶாந்தி: ஶாந்தி: ஶாந்தி: